# இரு வழி போக்குவரத்திற்கு தயாராகிறது அண்ணா சாலை

**சென்னை, ஆக. 3–**
மெட்ரோ ரயில் போக்குவரத்து கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளதால், எட்டு ஆண்டுகளுக்கு பின், சென்னை அண்ணா சாலையை, இரு வழி சாலையாக்க, போக்குவரத்து போலீசார் முடிவு செய்துள்ளனர்.

சென்னை, சைதாப்பேட்டையில் இருந்து, வண்ணாரப்பேட்டை வரை, தரைக்கு கீழே சுரங்கப்பாதையில், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இதற்கான கட்டுமான பணிகள், 2011ல் துவங்கின.

இதற்காக, அண்ணா சாலை, தர்காவில் இருந்து, ஆயிரம் விளக்கு பகுதி வரை, ஒரு வழி சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

பாரிமுனையில் இருந்து, சைதாப்பேட்டை வழியாக செல்லும் வாகனங்கள், ஜி.பி.சாலை மற்றும் ஒயிட்ஸ் சாலை வழியாக, அண்ணா சாலையை அடைகின்றன.

அதேபோல, சைதாப்பேட்டையில் இருந்து, பாரிமுனை நோக்கி செல்லும் வாகனங்களுக்காக, அண்ணா மேம்பாலத்தில் இருந்து, சிம்சன் வரை, ஒரு வழி சாலையாக மாற்றப்பட்டு உள்ளது.

தற்போது, மெட்ரோ ரயில் போக்குவரத்து கட்டுமான பணிகள் நிறைவு பெற்றுள்ளதால், எட்டு ஆண்டுகளுக்கு பின், அண்ணா சாலையை, இரு வழி சாலையாக மாற்ற, போக்குவரத்து போலீசார் முடிவு செய்து உள்ளனர்.

இது குறித்து, திருவல்லிக்கேணி போக்குவரத்து உதவி கமிஷனர், புருஷோத்தமன் கூறியதாவது:

அண்ணா சாலையில், மெட்ரோ ரயில் போக்குவரத்து கட்டுமான பணிகள் நிறைவடைந்து இருந்தாலும், நகரும் படிகட்டுகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இப்பணிகள் நிறைவு பெற்றால் தான், மெட்ரோ ரயில் நிர்வாகம், அண்ணா சாலையை எங்களிடம் ஒப்படைக்கும்.

தற்போது பணிகள் நடந்து முடிந்துள்ள, ஆயிரம் விளக்கு பகுதியில் இருந்து, டி.வி.எஸ்., பஸ் நிறுத்தம் வரை, இரு வழி சாலையாக்க, சாலை மைய தடுப்புகளை அமைத்துள்ளோம். அண்ணா சாலை, விரைவில், இரு வழி சாலையாக மாற்றப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.